DCS

ஊடக வெளியிடு
ஈ- பொருளாதாரத் தொகைமதிப்பு - 2026

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**தரவுகளின் அடிப்படையிலான பொருளாதாரத் திட்டமிடலுக்கு வலுவான அடித்தளத்தை அமைக்கும் இலங்கையின் முதல் ஈ- பொருளாதாரத் தொகைமதிப்பு (e-Census 2026) ஆரம்பம்**

இலங்கையில் விவசாயம் சாராத பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான சமீபத்தியதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான புள்ளிவிபரத் தகவல்களைத் தொகுப்பதற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள பொருளாதாரத் தொகைமதிப்பு (விவசாயம் சாராத பொருளாதார நடவடிக்கைகள்) **2025/2026-இன்** ஒரு பகுதியாக, நிறுவனங்களிடமிருந்து தகவல்களை இணையவழியாகச் சேகரிக்கும் முதல் ஈ- **தொகைமதிப்பு** (e-Census) இம்முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நாட்டில் உள்ள அனைத்து கைத்தொழில், நிர்மாணம், வர்த்தகம் மற்றும் சேவை நடவடிக்கைகளையும் உள்ளடக்கும் இப் பொருளாதாரத் தொகைமதிப்பு முதல் கட்டமாக, பெரியளவிலான நிறுவனங்களிடமிருந்து தகவல்களைச் சேகரிக்கும் நடவடிக்கை **2026 ஜூலை 01** ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது. இதற்கமைய, இந்நவீன டிஜிட்டல் முறையின் கீழ், 50 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட பெரியளவிலான நிறுவனங்களுக்கு, இணையத்தின் ஊடாக பாதுகாப்பாகவும், எளிதாகவும், திறம்படவும் தொகைமதிப்புத் தகவல்களை வழங்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நிறுவனங்கள் தமக்குச் சௌகரியமான நேரத்தில், எந்த இடத்திலிருந்தும் சுயமாகத் தகவல்களைச் வழங்க வசதியைப் பெறுகின்றன.

இந்த டிஜிட்டல் தரவுச் சேகரிப்பு முறையின் மூலம், தரவுச் சேகரிப்பு செயல்முறை மேலும் திறம்படவும், வேகமாகவும், செலவுக் குறைவாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் அமையும். மேலும், தரவுகளின் துல்லியம், தரம் மற்றும் காலப்பொருத்தத்தை மேம்படுத்துவதற்கும் இம்முறை குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஈ- தொகைமதிப்பின்** மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள், இலங்கையின் பொருளாதார அமைப்பு, கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைத் துறைகளின் வளர்ச்சி போக்குகள், வணிக நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றிய நம்பகமான புள்ளிவிபரங்களைத் தயாரிப்பதற்கான அத்தியாவசிய அடித்தளமாக அமையும். மேலும், இத்தகவல்கள் தேசிய அபிவிருத்தித் திட்டமிடல், பொருளாதாரக் கொள்கை வடிவமைத்தல், முதலீட்டு ஊக்குவித்தல் மற்றும் ஆதாரபூர்வமான முடிவெடுத்தல் ஆகியவற்றிற்கான வலுவான தரவுத்தளத்தை உருவாக்கும்.

தொகைமதிப்பிற்காக வழங்கப்படும் அனைத்து தகவல்களும் தொகைமதிப்பு ஒழுங்குவிதி (Census Ordinance) மற்றும் புள்ளிவிபர ஒழுங்குவிதி (Statistics Ordinance) ஆகியவற்றின் கீழ் முழுமையான இரகசியத்தன்மையுடன் பாதுகாக்கப்படும். தொகைமதிப்பில் நிறுவனங்கள் வழங்கும் அனைத்து தகவல்களும் புள்ளிவிபர நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதுடன், தனிநபர் அல்லது

நிறுவன ரிதியான தகவல்கள் எந்தவொரு தரப்பிற்கும் வெளிப்படுத்தப்படமாட்டாது என்பதை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் முக்கியமாக வலியுறுத்துகிறது.

ஈ- **தொகைமதிப்பின்** மூலம் தகவல்களை வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் இணையவழியாகத் தகவல்களைச் சமர்ப்பிக்காத, ஆனால் **50-க்கு** மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட பெரியளவிலான நிறுவனங்களிடமிருந்து தரவுகளைச் சேகரிப்பதற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பின்னர் அந்நிறுவனங்களுக்கு நேரில் வருகை தருவார்கள். இருப்பினும், கணக்கெடுப்பு உத்தியோகத்தர்கள் நிறுவனங்களுக்கு நேரில் சென்று மின்னணு சாதனங்கள் மூலம் தரவுகளைச் சேகரிக்க வேண்டிய நேரத்தை குறைப்பதற்காக, இயன்றவரை அனைத்து நிறுவனங்களும் ஈ- தொகைமதிப்பு முறையைப் பயன்படுத்தி தங்களது தகவல்களை சுயமாக இணையவழியாகச் சமர்ப்பிக்குமாறு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அனைத்து கைத்தொழில், நிர்மாணம், வர்த்தகம் மற்றும் சேவை நிறுவனங்களிடமும் அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

இலங்கையின் நவீன, தரவு அடிப்படையிலான மற்றும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான இம்முக்கிய தேசிய புள்ளிவிபரப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக, தொடர்புடைய அனைத்து நிறுவனங்களினதும் முழுமையான ஒத்துழைப்பையும் செயற்பாட்டுமிக்க பங்களிப்பையும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தயவுடன் எதிர்பார்க்கிறது.

**ஈ- தொகைமதிப்பு முறையில் பதிவு செய்தல் :**

**ஈ- தொகைமதிப்பு** முறையின் கீழ் தகவல்களை வழங்க விரும்பும், **50** அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட அனைத்து கைத்தொழில், நிர்மாணம், வர்த்தகம் மற்றும் சேவை நிறுவனங்களும், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்குச் சென்று முதலில் பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கறோம். பதிவுசெய்த பின்னர், அந்தந்த நிறுவனத்திற்காகத் தயாரிக்கப்பட்ட தனிப்பட்ட **இணைப்பு (link) மின்னஞ்சல்** மூலம் அனுப்பப்படும். அந்த இணைப்பைப் பயன்படுத்தி தொகைமதிப்புத் தகவல்களை நேரடியாக இணையவழியாக (Online) வழங்க முடியும்.

For registration: *ecensus.ecsl.statistics.gov.lk* or *www.statistics.gov.lk*

கே. எம். டீ. எஸ். டீ. கருணாரத்ன
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
2026 ஜூலை 01




Department of Census & Statistics,
"Sankyana Mandiraya"
No. 306/71,
Polduwa Road,
Battaramulla.

information@statistics.gov.lk
+94 11 2147000
+94 11 2147400
+94 11 2147011
www.statistics.gov.lk

**This publication is produced by the e Industry, Constructions, and Trade & Services Division.**

5th floor, Department of Census and Statistics
industries@statistics.gov.lk
+94 11-2147405
+94 11-2147412